*புதுச்சேரி அரசு*

*துணைநிலை ஆளுநர் செயலகம்*

**No. LGS/PRO/2026** **16 ஜூன் 2026**

# <u>பத்திரிக்கை செய்தி</u>

புதுச்சேரி அரசு சார்பில், பாரதப் பிரதமரின் மக்கள் நலத்திட்டங்களின் கீழ் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குதல் மற்றும் புதிய பயனாளிகளை பதிவு செய்யும் 'ஜன் கல்யாண் சபா' நிகழ்ச்சி கம்பன் கலையரங்கத்தில் இன்று (16.06.2026) நடைபெற்றது.

மாண்புமிகு துணைநிலை ஆளுநர் திரு K. கைலாஷ்நாதன் சிறப்பு விருந்தாக கலந்து கொண்டு பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கி சிறப்பித்தார்.

மாண்புமிகு முதலமைச்சர் திரு ந. ரங்கசாமி, தற்காலிக சட்டப்பேரவை தலைவர் திரு அன்பழகன், மாண்புமிகு அமைச்சர்கள் திரு ஆ. நமச்சிவாயம், திரு மல்லாடி கிருஷ்ணராவ், மாநிலங்களவை உறுப்பினர் திரு செல்வகணபதி, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயலர் திரு சரத் சவுகான், உள்ளாட்சித் துறை செயலர் திரு கேசவன் ஆகியோர் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். நிகழ்ச்சியில், பல்வேறு மக்கள் நலத்திட்டங்களின் கீழ் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன.